**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**MCOP.No: 80/2023** நாள் 17.07.2025

ம.சா.1, திரு. பவுல்ராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து பற்றி எனக்கு போலிசார் தகவல் சொன்னார்கள். விபத்து சம்மந்தமாக போலிசார் புகார் கொடுக்க சொன்னதின் பேரில் நான் புகார் கொடுத்தேன். விபத்து சமயத்தில் என் மகன் கல்லூரியில் படித்துவந்தார் என்பதை காண்பிக்ககூடிய படிப்பு சம்மந்தப்பட்ட சான்றை நான் தாக்கல் செய்யவில்லை. என் மகன் விபத்து சமயத்தில் Swiggy கம்பெனியில் உணவு வழங்கும் அலுவலராக வேலை பார்த்து வந்தார் என்பதைகாண்பிக்ககூடிய ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை. அவர் மூலம் மாதம் ரூபாய் எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் சமூகநல அலுவலர். விபத்த நடந்த இடத்தை நான் போய் பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபட படி என் மகன்தெற்கே இருந்து வடக்கு நோக்கி போய்கொண்டிருந்ததாகவே சொல்லியுள்ளது என்றால் சரிதான். என் மகனுக்கு பின்னாடி தான் அரசு பேருந்து வந்ததாக வரைபடத்திலும் காட்டப்படுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் சாலையின் இடது பக்கம் அனுகுசாலை ஒன்று சாலை செல்கிறது என்றும், பக்கத்தில் காவல் சோதனை சாவடி, பேரிக்கார்டு ஆகியவைகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வரைபட படி நான்கு பக்கமும் சாலைகள் சந்திக்கக்கூடிய பகுதியாக உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தை நேரடியாக பார்த்தவர்கள் சாட்சியம்அளித்தால் விபத்தானது யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டதுஎன்று சொல்லக்கூடும் என்றால் சரிதான். என் மகன் தான் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு அரசு பேருந்து வருவதை கவனிக்காமல் வலது பக்கத்தில் இருந்து இடது பக்கம் நோக்கி சென்றுகொண்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரரின் ஓட்டுநர் பேருந்தை மிகவும் கவனமாகத்தான் ஓட்டிச்சென்றார் என்றும் விபத்துநடந்ததாக சொல்லப்படும் பகுதியானது நான்கு சாலைகள்

சந்திக்ககூடிய பகுதிகள் என்றும் அதனால் அரசு பேருந்தை அதிக வேகமாக ஓட்டிச்செல்ல முடியாது என்று சொன்னால் அப்படியில்லை. என் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. இந்த விபத்திற்கு என் மகனின் கவனக்குறைவு தான் காரணம் என்றும் எனவே எங்களுக்கு விபத்து இழப்பீடு தொகையை எதிர்மனுதாரர் நிர்வாகம் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 17th day of July 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.